செ.வெ.எண்: 219

அரசு செய்திக் குறிப்பு – 28.4.2009

**பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு**
**மூன்றாம் கட்டமாக 50 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெற**
**ஏறத்தாழ 7 கோடி ரூபாய் மதிப்புடைய நிவாரணப் பொருள்களுடன்**
**25 கோடி ரூபாய் நிதியுதவி**
**தமிழக அரசு அறிவிப்பு**

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவும் பொருட்டு தமிழக அரசின் சார்பில் முதற்கட்டமாக ஏற்கனவே 80 ஆயிரம் குடும்பங்களுக்குத் தேவையான அரிசி, பருப்பு, சர்க்கரை, தேயிலை, சோப்பு, பேஸ்டு மற்றும் துணி வகைகள் கொண்ட 10 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பொருள்கள் 13.11.2008 அன்று கப்பல் மூலமாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டு, பின்னர் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக இலங்கைத் தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

மேலும், இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக, இரண்டாம் கட்டமாக, 40 ஆயிரம் குடும்பங்கள் பயனடையும் வகையில் 6 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்புடைய உணவுப் பொருள்கள் மற்றும் துணி வகைகளுடன் சமையல் பாத்திரங்களும் நிவாரணப் பொருள்களாக 40 ஆயிரம் சிப்பங்களில் கடந்த 22.4.2009 அன்று கப்பல் மூலமாக இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இவை மிக விரைவில் இலங்கையில் உள்ள தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள போரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ்க் குடும்பங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக விநியோகிக்கப்பட உள்ளன.

இலங்கையிலுள்ள தற்காலிக முகாம்களுக்கு தற்போது கூடுதலாக இடம் பெயர்ந்து வந்து சேர்ந்துள்ள இலங்கைத் தமிழ் மக்களுக்கு விநியோகிப்பதற்காக மூன்றாம் கட்டமாக ஏறத்தாழ 7 கோடி ரூபாய்

மதிப்புடைய, மேலும் 50 ஆயிரம் குடும்பங்களுக்கான நிவாரணப் பொருள்கள் அடங்கிய சிப்பங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க தமிழக அரசினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வழக்கமாக அனுப்பப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் துணி வகைகளுடன் இம்முறை குடிநீரைச் சுத்திகரிக்கத் தேவையான வில்லைகளும், 10 ஆயிரம் கிலோ எடையுள்ள குழந்தைகளுக்கான உணவுப் பொருள்களும் சேர்த்து அனுப்பப்படுகின்றன. இந்த நிவாரணப் பொருள்களும் இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்திற்கு வரும் மே மாதம் 5ஆம் தேதிக்குள்ளாக சென்னை துறைமுகத்திலிருந்து அனுப்பப்பட்டு, அங்குள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக, பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

இந்த நிவாரணப் பொருள்களுடன், இலங்கையில் துயருறும் தமிழ் மக்களுக்காக தமிழக அரசு திரட்டியுள்ள நிதியிலிருந்து எஞ்சிய 25 கோடி ரூபாய் தமிழக அரசின் சார்பாக நிதி உதவி வழங்கப்படும். இத்தொகை, மத்திய அரசு அறிவித்துள்ள ஒதுக்கீடான 100 கோடி ரூபாயுடன் சேர்த்து 125 கோடி ரூபாயாக பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்குத் தேவையான உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படும்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை

2/2

28-4-2009

Secretary to Government
Public and Rehabilitation Dept
Secretariat, Chennai-600 009